**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 292/2022**

பெயர் : கலியமூர்த்தி (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி :16.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எம்கேபி ஜேம்பர் பிர்க்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன். காழியப்பநல்லூர் கிராமத்தில் பிரிக்ஸ் தொழில் செய்து வருகிறேன். மேற்படி தொழில் நிறுவனம் 15 ஏக்கரில் செய்து வருகிறேன். பிரதிவாதியிடமிருந்து நான் கிரயம் பெற்ற தாவா இடம்15 ஏக்கருக்கு பக்கத்தில் தான் உள்ளது. இரண்டு இடத்திற்கும் சேர்த்து சுற்று சுவர் அமைத்துள்ளேன் என்றால் வேலி அமைத்துள்ளேன். 28 ஆயிரத்திற்கு கிரயம் பெற்றுள்ளேன். 20 பேரில் 19 பேர் கிரய ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளார்கள். ஒரு பாகத்தை விட்டு விட்டு தான் மீதி இடத்தை கிரயம் வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். 8 லட்சத்து 40 ஆயிரத்திற்கு பிரதிதிவாதியிடம் கிரயம் பேசினோம் என்றால் சரியல்ல. மேற்படி கிரய தொகையை 8 லட்சத்து 40 ஆயிரத்தில் 3 லட்சத்து 40 ஆயிரம் மட்டும் தான் கொடுத்தேன் என்றாலும் மீதி தொகையை இரண்டு வாரத்தில் வந்த பெற்றுக் கொள்ளுமாறு கூறிவிட்டு நான் கொடுக்கவிலலை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு 20 ஆண்டுகளுக்கு முன்பே பிரதிவாதியிடம் அக்ரிமெண்ட் போட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 22 வருடங்களாக என் அனுபவத்தில் இருந்து வருகிறது. கிரயம் 2020 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சரியான கிரய தொகையை கொடுக்காமல் என் செல்வாக்கை பயன் படுத்தி கிரயம் பெற்று க் கொண்டுள்னேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெறாத ஒரு பாக சொத்திற்குண்டான தொகையை உரியவரிடம் கொடுக்காமல் அந்த பாகத்தையும் சேர்த்து வசத்தில் வைத்துள்ளேன் என்றால் சரிதான். அதன் உரிமையாளரை பிரதிவாதி அழத்து வந்து கிரயம் செய்து கொடுக்கவில்லை. 100 குழி மட்டும தான் கிரயம் பெற்றுள்ளேன். அந்த இடத்தில் அமிர்தலிங்க செட்டியாருக்கு120 குழி உள்ளது என்றால் சரியல்ல. 100 குழி தான் பட்டா உள்ளது அதை தான் நான் வாங்கினேன். தாவா சொத்தின் அருகாமையில் கோவிலுக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரியல்ல. அமிர்தலிங்க

செட்டியாருக்கு 120 குழியில் 20 குழிக்கு உண்டான தொகையும் ஒரு பாகத்திற்கு குண்டான தொகையும் கொடுக்காததால் எனக்கு அறிவிப்பு கொடுத்து அதன் பின்னர் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு மன உளைச்சல், மனவேதனை அளிக்கவில்லை என்றாலும் நான் தான் பிரதிவாதிக்கு கிரயம் தொகையை முழுமையாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சிகிக்சை எடுத்தது தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரய தொகையை கொடுக்காமல் ஏமாற்றும் நோக்கில் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.